
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1180

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

58

**திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.**

# வீரன் வேலுத்தம்பி; கழ(ல)கத் திரைக் காவியம்!

*கலைஞர், தான் திரைக்கதை வசனம் எழுதும் திரைப்படங்களில் சில பெயர்களை உணர்வுபூர்வமாகத் தனது கதாபாத்திரங்களுக்குப் பயன்படுத்துவார். எடுத்துக்காட்டாக கதிரவன், உதயசூரியன் என்கிற பெயர்களை நாயகர்களுக்குச் சூட்டியுள்ளார். அதே போல (பட்டுக்கோட்டை) அழகிரி, தாளமுத்து, சபாரத்தினம் என்ற தமிழ்ச் சமூக வரலாற்றில் இடம்பெற்ற பெயர்களையும் பயன்படுத்தியுள்ளார். அவ்வாறு திட்டமிட்டு சூட்டப்பட்ட பெயர்தான், 'வீரன் வேலுத்தம்பி' என்பதுமாகும். 1980-களில் இப்பெயர் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக விளங்கியதை நாமறிவோம். அதே நேரம், வன்முறைப் போராட்டத்தில் தி.மு.க.விற்கு உடன்பாடு இல்லை என்பதையும் திரைப்படத்தின் தொடக்கத்திலேயே கலைஞர் திரையில் தோன்றி சொல்வார்.*

*"என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே, வணக்கம். வன்முறை இருபுறமும் கூர் உள்ள ஒரு கத்தி. அது, பயன்படுத்தியவரையே திரும்பத் தாக்கும். எனவே அமைதிவழி, அறவழியில் கொள்கைக் குறிக்கோள் நிறைவேற்றிக்கொள்ளப் பணியாற்ற வேண்டுமெனப் பெரு விருப்பமுடையவன் நான்.*

*இத்தகைய கருத்துக்கு மாறாக, சமுதாயத்தில் சில நேரங்களில் வன்முறை தலைதூக்குவது, தவிர்க்க முடியாததாக ஆகிவிடுகிறது. எனவே, நோயின் விளைவுகளைப் பற்றிக் கவலைப்படுவதைக்காட்டிலும், நோயின் காரணத்தை அறிந்து, அதனை அகற்றுவதில் ஆழ்ந்த அக்கறை காட்டவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிடுகிறது.*

*ஆதிக்க வெறி, அதிகார போதை, பதவி ஆணவம் இவை போன்ற தீய சக்திகளால் அடக்கப்படுகின்றவர்கள், சில நேரங்களில் எரிமலைகளாக வெடிக்க நேரிடுகிறது. மிதிக்க மிதிக்க புழுவும் புலியாகும் என்பதைப் போல, அமைதியான வாழ்வை விரும்புகிற வாலிபர்கள் சிலர்கூட, உதைக்கப்பட்ட பந்து உயரக் கிளம்புவது போல் எழுச்சியுற்றுக் கிளம்பக் காணுகிறோம்.*

*கனிவு, பற்று, பாசம் எனும் தேனருவியாகத் திகழ்ந்தவன்தான் இந்தக் கற்பனைத் திரைக் காவியத்தின் கதாநாயகன் வேலுத்தம்பி. அவனைச் சீறிப் பாயும் சிங்கமாகச் சுழன்றடிக்கும் சூறாவளியாக உருவாக்கிய சூழ்நிலைகள் யாவை என்பதைச் சித்திரிப்பவையே இந்தக் கதையாகும்.*

*சூது, சூழ்ச்சி, ஆணவம், அகந்தை, ஊழல், லஞ்ச லாவண்ய மோசடிகளுக்கு மத்தியில், அவற்றை எதிர்த்து தீவிரப்போராட்டம் நடத்தும் ஒரு தியாக மறவனின் வரலாறே வீரன் வேலுத்தம்பி. வன்முறையின் விரும்பத்தகாத விளைவுகளை எடுத்துக் காட்டுவதோடு, அந்த வன்முறை நோய்க்கான காரணங்கள் களையப்பட வேண்டும் என்று கோடிட்டுக் காட்டுவதே இந்தத் திரைப்படத்தின் நோக்கம் என்பதை, நாட்டில் அமைதி விரும்புகிற நல்லவர்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்" என்கிற அந்த உரை, திரைப் படத்தின் நோக்கத்தைப் பேசுவது போல போராட்டத்தின் நோக்கத்தையும் கூறும்.*

*படத்தின் தொடக்கக் காட்சியில், நீதிமன்றத்தின் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருப்பார், கதாநாயகன் வேலுத்தம்பி.*





படங்கள் உதவி : ஞானம்

***நீதிபதி:*** *..... குற்றவாளி ஏதாவது சொல்ல விரும்புகிறாரா?*

***வேலுத்தம்பி:*** *நீதிபதி அவர்களே, நான் குற்றவாளி இல்லைன்னு சொல்றதுக்கு வேண்டிய சாட்சியங்கள் அந்தக் கொலை நிகழ்ச்சியிலே பிணமாயிட்டாங்க. அந்தக் கொலையைச் செஞ்சவங்களே என்னைக் குற்றவாளிக் கூண்டுல நிக்க வச்சிருக்காங்க. பதவித்திமிர், பணக் கொழுப்பு இதை வச்சு சட்டத்தை மடக்கிடலாம், ஒரு நிரபராதியைத் தண்டிச்சிடலாம்னு துணிஞ்சிட்டவங்கள எதிர்த்து வழக்காடுறதுல என்ன பிரயோசனம்? அரசாங்க வக்கீல் சொன்னார், என்னைத் தூக்குல தொங்க விடணும்னு. இந்த நாட்டுல உண்மையே தூக்குல தொங்கிட்டுதானே இருக்கு! உண்மையாகத் தூக்குல தொங்க வேண்டியவங்க எல்லாம் உல்லாசமாக ஊஞ்சல்ல ஆடிக்கிட்டு இருக்காங்க. அவங்க யாரு? எங்க இருக்காங்க? எவ்வளவு உயரத்துல இருக்காங்கன்னு சுட்டிக் காட்டுறதுக்கு ஒரே சாட்சி மனச்சாட்சி! அந்த சாட்சிக்கு இந்த கோர்ட் இடம் கொடுக்குமோ கொடுக்காதோ அது எனக்குத் தெரியாது.*





***வழக்கறிஞர் :*** *யுவர் ஆனர்! மனச்சாட்சிக்கு உருவமும் கிடையாது. அது கூண்டுலயும் ஏற முடியாது.*

***வேலுத்தம்பி:*** *ஆமா, மனச்சாட்சிக்கு உருவம் கிடையாது உண்மை கிடையாது. உண்மையோட கண்களைத் தோண்டிவிட்டு, நியாயத் தராசின் முள்ளைப் பார் என்று சொல்வதோ, அதனுடைய நாக்கை அறுத்துவிட்டு, நல்ல தீர்ப்பு வழங்கு என்று சொல்வதோ, அதனுடைய காதுகளைச் செவிடாக்கிவிட்டு, நீதியின் குரலைக் கேளுன்னு சொல்றதோ கடைந்தெடுத்த பைத்தியக்காரத்தனம். எனவே, நீதிபதி அவர்களே! உங்ககிட்ட மட்டுமல்ல இந்த நாட்டு மக்கள்கிட்ட இருந்தும் நேர்மையான தீர்ப்பைப் பெற நான் என்னையே நம்பி இருக்கேன். என் உள்ளத்து உறுதியை நம்பியிருக்கேன்" என்று பேசுகிறான்.*

*அடுத்த காட்சியில், போலீஸிடமிருந்து வேலுத்தம்பி தப்பிவிட்டதை அறிந்த ஊர்மக்கள், வேலுத்தம்பியின் படத்தை வைத்து, ஆடிப்பாடிக் கொண்டாடுகின்றனர். அப்போது அங்கு வரும் காவல் துறையினர், மக்களைத் தாக்குகின்றனர். அதனைக் கண்டு மொழிப்போர் தியாகி (மு.க.முத்து) இன்ஸ்பெக்டரிடம் எதிர்த்துக் கேள்வி எழுப்புவார்.*

***மொழிப்போர் தியாகி:*** *இது என்னையா அக்கிரமம்? வேலியே விளைச்சலைத் திங்கிற மாதிரி அமைதியைக் காப்பாத்தவேண்டிய நீங்களே இப்படி குண்டு வெடிக்கிறீங்களே இது நியாயமா?*

***இன்ஸ்பெக்டர்:*** *காலு இருந்தா நீயும் ஓடியிருப்பே.*

***மு.க.முத்து:*** *காலு இருந்தாலும் ஓட மாட்டேன். ஏன்னா எனக்கு மானமும் இருக்கு; வீரமும் இருக்கு; மிஸ்டர் இன்ஸ்பெக்டர், இந்தக் காலு ஏன் போனது தெரியுமா? வீழ்வது நாமாக இருந்தாலும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்னு மொழிப் போராட்டத்துல அடக்குமுறையை எதிர்த்துப் போராடுனேன். அதுல போனதுதான் இந்தக் கால்.*

***இன்ஸ்பெக்டர் :*** *போலீஸ்காரர்களால் தேடப்படுகிற ஒரு கொலைகாரனை, கொள்ளைக்காரனைப் படம் எழுதி வச்சுப் பாட்டுப் பாட உங்களுக்கு எவ்வளவு துணிச்சல் இருக்கணும்?*

***மு.க.முத்து:*** *யாரு கொலைகாரன் ? யாரு கொள்ளைக்காரன் ? உழைக்கிற சனங்களோட ரத்தத்த உறிஞ்சி, ஊழல் நடத்தி, ஊரையே கொள்ளையடிச்சு வச்சிருக்காங்களே அவங்ககிட்டயிருந்து எடுத்து ஏழைகளுக்குப் பங்கிட்டுக் கொடுக்கிற புண்ணியவானா கொலைகாரன்? கொள்ளைக்காரன்? இதோ பாருங்கய்யா இந்தப் பானையில கொதிக்கிற அரிசி எல்லாம் வேலுத்தம்பி கொடுத்ததுய்யா.*

***இன்ஸ்பெக்டர் :*** *தெரியும்டா! இது சோறு கொதிக்கிற பானையில்ல சாராயம் காய்ச்சுற பானையான்னு செக் பண்ணுங்கய்யா" என்று கூறி கைத்துப்பாக்கியால் சோற்றுப்பானைகளைச் சுட்டுத் தள்ளிவிட்டு, மொழிப்போர் தியாகியையும் துப்பாக்கியால் சுட்டுக் கொல்கிறான்.*

*அடுத்து, நேர்மையான போலீஸ் இன்ஸ்பெக்டர் ரகுமான்கானைக் (விஜயகாந்த்) கைது செய்து சிறையில் அடைத்த கடத்தல்காரன் பூதலிங்கத்தை (எஸ்.எஸ்.சந்திரன்) மேலதிகாரி விடுதலை செய்துவிடுகிறார். அதைக் கேள்விப்படும் ரகுமான் கான், மேலதிகாரியிடம் கேள்வி கேட்பான்.*

***ரகுமான் கான்:*** *பேயாட்சி செய்தால், பிணம் தின்னும் சாத்திரங்கள்னு பாரதியார் இவுங்களுக்காகத்தான் பாடி வச்சார் போலிருக்கு. சார், என் உயிரே போனாலும் சரி, நான் கவலைப்படலை. மனுசனுக்கு மானம்தான் சார் முக்கியம்.*

*உயிருக்குப் பயந்தவங்க இந்த வேலைக்கு வந்திருக்கக் கூடாது. எது எப்படியோ திரும்பவும் நான் அவுங்க மேல ஆக்சன் எடுப்பேன். நீங்க எனக்கு உதவி செய்யணும்."*

*இவ்வாறு வீரன் வேலுத்தம்பி திரைப்படம் 1987 கால தமிழ்நாட்டின் எம்.ஜி.ஆர். ஆட்சியின் அவலங்களை அம்பலப்படுத்தும் விதமான காட்சிகளையும் கலைஞரின் காத்திரமான வசனங்களையும் கொண்டு ஒரு கழ(ல)கத் திரைக் காவியமாகவே விளங்கியது.*

**...காட்சி விரியும்**

## விண்வெளித் துறையில் அதானிக்கு சிவப்புக்கம்பளம்?

இந்திய விண்வெளிச் சங்கம் (ISPA) ஏற்பாடு செய்திருந்த DefSpace Symposium 2026-இல் முப்படைகளின் தலைமைத் தளபதி ஜெனரல் அனில் சௌஹான் கலந்துகொண்டு பேசியபோது, "விண்வெளித் துறையில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தை (இஸ்ரோ) மட்டும், நாடு சார்ந்திருக்க முடியாது. தனியார் பங்களிப்பாளர்களும் வர வேண்டும்" என்று பேசியிருக்கிறார்.

"எதிர்கால விண்வெளித் திறனை அரசு நிறுவனங்கள் மட்டும் உருவாக்காது. அது தொழில்துறை, புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழில்நுட்பப் புதுமையாளர்களுடன் இணைந்து உருவாக்கப்படும். விண்வெளியை ஒரு திட்டமாகப் பார்ப்பதிலிருந்து, அதைத் தொடர்ச்சியான செயல்பாட்டுச் சொத்தாகக் கருதும் நிலைக்கு நாம் மாற வேண்டும்" என்று அவர் கருத்து தெரிவித்திருக்கிறார்.

பாதுகாப்புத் தளவாடங்கள் உற்பத்திக்காக 2026-ஆம் ஆண்டில் 1.8 இலட்சம் கோடி ரூபாய் முதலீடு செய்ய அதானி டிஃபென்ஸ் அண்டு ஏரோ ஸ்பேஸ் நிறுவனம் திட்டமிட்டிருப்பதாக மூன்று மாதங்களுக்கு முன்பு ஊடகங்களில் செய்திகள் வெளியான நிலையில், விண்வெளித் துறையில் தனியார் முதலீடுகளை அதிகரிக்க வேண்டுமென்று பேசியிருப்பது, அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது.

விமானப் பயிற்சியில் இறங்குவதற்காக ஃப்ளைட் சிமுலேஷன் டெக்னிக் சென்டரை (FSTC) வாங்கும் முயற்சியிலும் அதானி குழுமம் ஈடுபட்டுள்ளது. ஆனால், இதற்கெல்லாம் உரிய முன் அனுபவம் அதானி குழுமத்திற்கு இருக்கிறதா? என்றால், நிச்சயம் இல்லை. 'ஆத்மநிர்பார் பாரத்' எனக்கூறி, அதானி குழுமத்திற்கு இத்தகைய அனுமதிகளை ஒன்றிய அரசு எளிமையாக வழங்கிவிடுகிறது. 'ஹிண்டன்பர்க் அறிக்கை'யினால் உலகம் முழுவதும் நம்பகத்தன்மை அற்ற நிறுவனமாக 'அதானி குழுமம்' மாறியுள்ள சூழலில், இந்தியாவில் மட்டும் விமானம், துறைமுகம் என முக்கியத் துறைகள் ஒவ்வொன்றும் அதானி வசமாகி வருகின்றன.

இப்போது, பாதுகாப்பு மற்றும் விண்வெளித் துறையையும் அதானியிடம் விட்டுவிடப்போகிறார்களோ என்ற அச்சத்தை ஏற்படுத்துவதாக இவை உள்ளன என்ற விமர்சனங்கள் சமூக வலைதளங்களில் எழுந்துள்ளன.

## ஃப்ளாஷ்பேக்





செ.வ.இராமாநுசன்

### கலைஞர் பிறந்தநாளில் கலைஞர் 100

3.6.1990 அன்று, தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா, சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்றது. விழா மேடையில், என் தந்தையார் புலவர் செ.வரதராசனார் அவர்கள் தொகுத்த 'கலைஞர் நூறு' என்ற கவிதைத் தொகுப்பு நூலினை வெளியிட்டார், முத்தமிழறிஞர் கலைஞர். விழாவில், வைகோ அவர்கள், அமைச்சர்கள் ஆற்காடு வீராசாமி, வீரபாண்டி ஆறுமுகம் ஆகியோர் உடனிருந்தனர். தலைவருக்கு நானும் பொன்னாடை போர்த்தி மகிழ்ந்தேன். மறைந்த என் தந்தையார் புலவர் செ.வரதராசனார் அவர்களின் 101-வது பிறந்தநாளையொட்டி வெளியானது மகிழ்ச்சி அளிக்கிறது. எங்கள் இல்லத்தின் வரவேற்பு அறையில், எப்போதும் ஒளிவீசிக் கொண்டிருக்கும் படம்.

**- செ.வ.இராமாநுசன். சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கழகம்

### அதிர்ச்சியான வெற்றி, தோல்விகள்!

1957-ஆம் ஆண்டு மார்ச் 11 அன்று, தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டன. கழகம் 15 இடங்களில் வென்றது. பதிவான மொத்த வாக்குகளின் எண்ணிக்கை 1,16,26,902. அதில் தி.மு.க. 16,53,434 வாக்குகளைப் பெற்றிருந்தது. பேரறிஞர் அண்ணா, கலைஞர், பேராசிரியர், ஏ.வி.பி.ஆசைத்தம்பி, சத்தியவாணிமுத்து உள்ளிட்ட தலைவர்கள் வெற்றிபெற்றனர். சேலத்தில், நாவலர் வெற்றிபெற முடியவில்லை. கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ப.ஜீவானந்தம், பி.ராமமூர்த்தி, மணலி கந்தசாமி உள்ளிட்ட தலைவர்களும் வெற்றிபெறவில்லை.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900